Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-05 | 21-08-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-185



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12426)

## திருமலை நகரில் படையினரின் ஒத்துழைப்புடன்

# முகமூடியணிந்த இனந்தெரியாத ஆயுதக்குழு

# இலக்கமற்ற உந்துருளிகளில் நடமாட்டம்

## நடவடிக்கை எடுக்க கண்காணிப்புக் குழுவிடம் வலியுறுத்து

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாத ஆயுததாரிகள் முகத்தை கறுப்புத்துணியால் மூடிக்கட்டியவாறு இலக்கத்தகடற்ற இருபது உந்துருளிகளில் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடமாடியமைக்கும், படையினர் இதற்கு ஆதரவாக செயற்பட்டமைக்கும் எதிராக கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டுமென திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் விபரம் வருமாறு. சிறிலங்காவின் சனாதிபதியால் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்குப் பின்னர் 13.08.2005 அன்று அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கபட்டது. இது நடைபெற்று ஒன்பது நாட்களே ஆகின்றது. ஆனால் திருகோணமலை நகரத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மாலை ஈ.பி.டி.பி. தேசவிரோதக் குழுவைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மாலை 5.30 மணியளவில் சமணங்குளம் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் நடராசா கேசவரன் (வயது-25) என்பவரே பலியானவராவார்.

ஈருருளியில் சென்று கொண்டிருந்த இவரை உந்துருளியில் சென்று கொண்டிருந்த இருவர் அணுகி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.நகரில் கைக்குண்டு வீச்சு சிப்பாய் ஒருவர் காயம்

### பொதுமக்கள் மீது படையினர் தாக்கு

மட்டக்களப்பு நகரில் நேற்றுப் பகல் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்துள்ளார். நகரிலுள்ள அரசாங்க உணவு பண்டசாலையில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த நான்கு இராணுவ வீரர்களை நோக்கியே இந்தக் கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனையடுத்து வீதியால் பயணித்த பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் இதனால் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. உந்துருளியில் சென்ற இருவரே கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதாகப் படையினர் தெரிவித்தனர். (32)

## வவு.மகளிர் அரசியல் துறை செயலகம் மீதான தாக்குதலில் போராளி உட்பட மூவர் படுகாயம்

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைச்செயலகம் மீது நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு போராளி உட்பட மூவர் படுகாயமடைந்தனர் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதலில் காயமடைந்த மற்றைய இருவரும் பணியாளர்கள் ஆவர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்ததையடுத்து அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டுள்ளனர். (10)

## போராளியின் அடையாள அட்டை யாழ்.இல் பொலிசாரினால் பறிப்பு

யாழ். சங்கானை அரசியல்துறை அலுவலகத்தில் பணிபுரியும் செந்தோழன் என்ற போராளியினுடைய அடையாள அட்டையைப் பறித்துச் சென்றுள்ள சிறிலங்காப் பொலிசார் அவசரகாலச் சட்டத்தில் தமக்கு எதையும் செய்ய அதிகாரம் உள்ளதாக அப்போராளியிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணியளவில் யாழ். மணிக்கூட்டு கோபுரத்திற்கு அண்மையில் ஈருருளியில் போராளி செந்தோழன் சென்று கொண்டிருந்தபோது அவரை வழி மறித்த பொலிசாரே அவரின் அடையாள அட்டையைப் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ள யாழ். மாவட்ட அரசியல்துறையினர் செந்தோழனின் அடையாள அட்டையைப் பெற்றுத் தருமாறு கோரி யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர்.

## பிராந்திய ஒத்துழைப்புத் தொடர்பாக ரணில்-நட்வர்சிங் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்குடன் பிராந்திய ஒத்துழைப்புக் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாக நேற்று ஐக்கியதேசியக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அண்மைய இந்திய விஜயத்தின் பொழுதே இந்தக் கருத்து பரிமாறப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தவிர இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

### -கொழும்பு வெள்ளவத்தையில்

## சுடரொளி விளம்பரப் பணிமனை மீது இரு கைக்குண்டுகள் வீச்சு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள சுடரொளி தமிழ் பத்திரிகையின் விளம்பரப் பணிமனைக்குள் இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன. எனினும் இக் கைக்குண்டுகள் வெடிக்காமையால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

நேற்று மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற இக் குண்டு வீச்சுத் தொடர்பாக சிறிலங்கா பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் அவற்றை எடுத்துச் சென்று கடற்கரையில் வைத்துச் செயலிழக்கச் செய்தனர்.

இக் குண்வீச்சு நடைபெற்ற வேளையில் அங்கு மூன்று பணியாளர்கள் கடமையில் இருந்துள்ளனர். (32)

## அரசின் பொய்ப்பிரச்சாரங்களை முறியடித்து எம்மக்களுக்கு வெற்றியைத் தேடிக்கொடுப்போம்

### -கொழும்பு தமிழ்ஊடகத்திற்கு சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

எமக்கு எதிராக எம்மீது மோசமாக கறை பூசுகின்ற பிரச்சாரங்களை நாம் முறியடித்து நிச்சயமாக எமது மக்களுக்கு நல்லதொரு வெற்றியை தேடிக்கொடுப்போம் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளோம்.

இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கொழும்பு தமிழ்ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் அச்செவ்வியில் தெரிவித்துள்ளதாவது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அனைத்து கொலைச் சம்பவங்களுக்கும் ஆயுதக் குழுக்களும், சிறிலங்கா அரசாங்கமும், அதன் படைத்தரப்பும் விடுதலைப்புலிகள் மீதே குற்றம் சாட்டிவந்தன.

ஒலிபரப்பாளர் ரேலங்கியும்,

(12ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

### காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி-கனகபுரம் 10ஆம் பண்ணையில் உள்ள இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எஸ்.குகன் இல-104, 10 ஆம் பண்ணை கனகபுரம். (6656)

### முல்லை. மகாவித்தியாலய அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகாவித்தியாலய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய தற்காலிக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இக் கலந்துரையாடல் இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்கள் சங்கம் கேட்டுள்ளது.(20)

## திருமலையில் பொருண்மிய மதியுரையகத்தின் ஒரு வருட நிறைவு விழா

(திருகோணமலை)

திருகோணமலை ''டெக்'' பொருண்மிய மதியுரையகம் திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவு பெறுவதை ஒட்டி திருகோணமலை பாடசாலை மாணவர் மத்தியில் கணினி அறிவுப் புதிர்ப்போட்டி ஒன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இப் போட்டியில் பாடசாலை ஒன்றிலிருந்து ஐந்து மாணவர்களைக் கொண்ட குழு வீதம் எழுத்து மூலப் பரீட்சையில் பங்கு பற்ற வேண்டும். அப் பரீட்சையில் அதிகப்படியான புள்ளிகளைப் பெறும் நான்கு பாடசாலைகள் மத்தியிலே புதிர்ப்போட்டி நடத்தப்படும் என்று திருமலை 'டெக்' நிறுவனம் அறிவித்துள்ளது. எழுத்துப் பரீட்சை ஓகஸ்ட் 27 இல் நடைபெறும் என்றும் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## இரு தடவைகள் பதியப்பட்ட உந்துருளிகளை உரிய முறையில் பதியக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த ஏப்பிரல் மாதம் 29,30 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையின் போது பதிவு செய்யப்பட்ட உந்துருளிகளில் 29 உந்துருளிகள் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டவைகளாக இனங்காணப்பட்டுள்ளன. இதனால் இந்த உந்துருளிகளுக்கு வழங்கப்பட்ட 502 தொடர்பான இலக்கங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய உரிமையாளர் இவ் உந்துருளிகளுக்குரிய பழைய இலக்கங்களை பெற்றுக் கொள்வதற்கு உரிமை மாற்றப் படிவத்துடன் விபரமான சத்தியக் கடதாசியினை இணைத்து அரச அதிபரின் பரிந்துரையுடன் உரிமை மாற்றம் செய்ய முடியும்.

எனவே குறிப்பிட்ட 29 உந்துருளிகளின் உரிமையாளர்களும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் வாகன கிளையுடன் தொடர்பு கொண்டு உடன் உரிமை மாற்றம் செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.(தீ)

## சாரதி அனுமதிப்பத்திர பரீட்சையில் சித்தி எய்தாதோர் விண்ணப்பங்கள் புதுப்பிக்குக!

(அலுவலக செய்தியாளர்)

கடந்த ஏப்பிரல் மாதம் 29,30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையின் போது,சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடையத் தவறியவர்களும், செய்முறைப் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களும், கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து கிளையுடன் தொடர்பு கொண்டு, தங்களது விண்ணப்பங்களைப் புதுப்பித்துள்கொள்வதுடன், புதிய மருத்துவச் சான்றிதழையும் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்து தோற்றமுடியாமல் போனவர்களும் தங்களது விண்ணப்பத்தைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். விரைவிலேயே மற்றொரு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான நடமாடும்சேவை நடைபெற உள்ளமையினால் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த ஏப்ரல் மாதம் 29,30 ஆம் திகதிகளில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையின் போது ஏற்றுக்கொள்ளப் பட்ட சேவைகளில் ஒரு தொகுதி கடமைகள் முடிக்கப்பட்டுள்ளன இவற்றில்,

ஒரு தொகுதி உரிமை மாற்றம் செய்யப்பட்ட புத்தகங்கள்,

502- பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட உந்துருளிகளுக்கான பதிவுப் புத்தகங்கள்.

ஆங்கில எழுத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட உந்துருளிகளுக்கான பதிவுப் புத்தகங்கள்.

மீளப்புதுப்பிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் ஒரு தொகுதி, என்பன கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பிட்ட விபரங்களை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து செயலகத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். அத்துடன் உரியவர்கள் நேரடியாக வருகைதந்து (தேசிய அடையாள அட்டையுடன்) தற்காலிக ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (தீ)

உங்கள் குழந்தைகளை அபாக்கஸ் பயிற்சியால்

**கணித மேதை**

ஆக்குகின்றோம்

GAMA ABACUS

★ அபாக்கஸ் (Abacus Training) ★ மனக்கணிதம் (Mental Arithmetic) ★ ஞாபகக்கலை (Memory Techinques)

**கிளி /முல்லை மாவட்டங்களிற்கு**

ABACUS கல்வியை மாணவர்களிற்கு கற்பிற்பதற்கு ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அத்துடன் இக்கல்வியை வேறு இடங்களில் நடாத்த விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம். ஆசிரியர்களை நேர்காணலின் பின்பு திறமையினடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும். எம்முடன் இணைந்து சேவையாற்ற விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளிற்கு,
**GAMA ABACUS ACADEMY**
கிளி/ மத்திய கல்லூரி முன்பாக
கிளிநொச்சி.

*மாணவர்களின் விண்ணப்பங்கள் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதனையும் அறியத் தருகின்றோம்.* (6659)

## TR TEC நிறுவன அனுசரணையுடன் TECH நிறுவனம் நடாத்தி வரும்

### பின்வரும் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

### இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

வன்னி மண்ணில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களுடன் கூடிய கற்கைநெறிகளை ஒரே கூரையின் கீழ் கற்பதற்கு வசதியாக தனித்தனியாக அமைக்கப்பட்ட ஆய்வுகூடங்களுடனும், நவீன சாதனங்களுடனும், இலவசமாகவும் பயிலுவதற்கு வாய்ப்பு

- **IELTS ஆங்கில கற்கைநெறி-3 மாதம் (கட்டணம் அறவிடப்படும்)**
  **(பட்டதாரியாக இருத்தல் வேண்டும்)**
- Diploma in Electronics- **6 மாதம்**
  **(க.பொ.த (சா/த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்)**
- Diploma in PC maintenance & Net working (Hardware)- **6 மாதம்**
  **(க.பொ.த (சா/த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்)**
- Diploma in software Engineering (Visual Basic)- **9 மாதம்**
  **(க.பொ.த (உ/த) கணிதம் அல்லது விஞ்ஞானப்பிரிவில் பௌதிகவியல் சித்தி)**

குறிப்பு:-

(01) விண்ணப்பங்களை 28.08.2005 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ தபால்மூலமோ, மின்அஞ்சல் மூலமோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(02) குறித்த எண்ணிக்கையானோர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

(03) ஒருவர் ஒரு கற்கை நெறியை மட்டுமே தொடர முடியும்.

மின் அஞ்சல் trtec_tech@yahoo.com
தபால் முகவரி நிர்வாக அலுவலர்,
TR TEC,
A9 வீதி,
கிளிநொச்சி.

(சி.12575)

# காஸா கடைசிக் குடியிருப்பும் வெளியேற்றப்பட்டது

# யூதர்களின் தாக்குதலில் 31 இராணுவம் காயம்

(காஸா)

**காஸா பகுதியில் குடியமர்த்தப்பட்ட யூதர்களின் கடைசிக் குடியிருப்புக்களும் வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அப்போது எதிர்ப்பாளர்கள் நடத்திய தாக்குதலில் 31 இராணுவத்தினர் காயமடைந்தனர்.**

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேலைச் சேர்ந்த யூத இனத்தவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 38 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற இந்த குடியேற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பலஸ்தீனியர்கள் போராட்டம் நடத்தி வந்தனர். தற்போது காஸா பகுதியில் இருந்து யூதர்களை வெளியேற்ற இஸ்ரேல் அரசு நடவடிக்கை எடுத்தது. பல குடியிருப்புக்களில் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும் பின்னர் அமைதியுடன் தங்கள் குடியிருப்புக்களை காலி செய்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழனன்று இறுதியாக நெவே டெலிகாலிம் பகுதியிலுள்ள பாரிய குடியிருப்புப் பகுதியை காலி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் இராணுவம் மற்றும் சிறப்பு பொலிஸ் படையினரை தாக்கினார்கள்.

அழுகிய முட்டை மற்றும் திராவகம், இரசாயன வர்ணங்களை கண்ணாடி குமிழ்களில் அடைத்துப் படையினர் மீது வீசி அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் 31 படையினர் காயமடைந்தனர். பொலிசார் பாரம் தூக்கிகளைப் பயன்படுத்தி



எதிர்ப்பாளர்கள் மீது தண்ணீர் வீசித் தாக்குதல் நடத்தி விரட்டியதுடன் 160 பேரை கைது செய்தனர்.

நேற்று முன்தின நடவடிக்கையுடன் காஸாவில் குடியமர்த்தப்பட்ட 8,500 பேர்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இஸ்ரேலியப் படையினரால் அகற்றப்பட முன்னர் தமது வீட்டின் கூரையில் துவாரம் ஏற்படுத்தி கதறியழும் யூதப் பெண்மணிகள்.

## பயணிகள் மோதல் விமானம் தரையிறங்கியது

(குவாம்)

ஜப்பானில் இருந்து அமெரிக்கா நோக்கி 300 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த விமானப் பயணிகளிடையே திடீரென்று தகராறு ஏற்பட்டு மோதிக் கொண்டதில் அந்த விமானம் குவாம் தீவிலுள்ள விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டது.

அங்கு விமானத்தில் இருந்த பயணிகள் வெளியேற்றப்பட்டனர். இந்த நடவடிக்கையில் இரண்டு பயணிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது.





கிழக்கு பாக்தாத்தில் மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டு வீட்டுத் திரும்பிய நால்வர் இனந்தெரியாதோரின் துப்பாகிச் சூட்டிற்கு இலக்காகி இறந்தனர். அவர்களின் பூதவுடற் பேழைகளை மக்கள் காவி வருகின்றனர்.

# யூதர்களின் வெளியேற்றம் மகிழ்ச்சியானது — அப்பாஸ்

காஸா நிலப்பரப்பிலிருந்து யூதக்குடியேற்றவாசிகள் வெளியேறுவது மகிழ்ச்சி தருவதாக பலஸ்தீன சனாதிபதி மகமூட் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

யூதக்குடியேற்றவாசிகள் காஸா நிலப்பரப்பிலிருந்து வெளியேறுவதையிட்டு பலஸ்தீன மக்கள் பெருமகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

யூதர்களின் வெளியேற்றத்தின் மூலம் வரலாறுகாணாத மகிழ்ச்சியடைகின்ற போதிலும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பலஸ்தீன மக்களை அப்பாஸ் கேட்டுள்ளார்.



மேற்குக்கரை மற்றும் ஜெருசலேம் ஆகிய பகுதிகளிலுள்ள யூதக்குடியேற்றங்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னோடியாக காஸா நிலப்பரப்பிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்படும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் அவர் கூறினார்.

## ஈராக்கில் சமஷ்டி ஆட்சி கொண்டுவரப்படாவிட்டால் நாடு சிவில் யுத்தத்திற்குள் தள்ளப்படும்

### ஈராக் பாதுகாப்பு ஆலோசகர்

ஈராக்கின் புதிய அரசியல் யாப்பில் சமஷ்டி ஆட்சிமுறை கொண்டுவரப்படாவிட்டால் நாடு சிவில் யுத்தத்திற்கு எடுத்துச் செல்லப்படும் ஆபத்து இருப்பதாக ஈராக்கின் பாதுகாப்பு ஆலோசகர் எச்சரித்துள்ளார்.

சமஷ்டி முறையில் இல்லாமல் எந்தவொரு சமூக நலன்களையும் பேண முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஷியா முக்சதாஅல்சதாரின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் சமஷ்டி முறையைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியுள்ளார்கள். நகல் அரசியல்யாப்பு பாராளுமன்றத்திற்கு நாளை சமர்ப்பிக்கப் படவேண்டுமென்று காலக்கெடு விதிக்கப்பட்டிக்கின்றது. இத் திகதிக்கு முன்பு அரசியல்யாப்பை தயாரிப்பதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது இதில் அமெரிக்கா அதிக அக்கறை காட்டிவருகிறது.



ஆப்கானிஸ்தானின் 86 ஆவது சுதந்திர தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. காபூல் மைதானத்தில் நடந்த ஆப்கான் தேசிய இராணுவத்தினரின் அணி வகுப்பு.

## கஜகஸ்தானில் டிசம்பரில் சனாதிபதித் தேர்தல்

ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற கஜகஸ்தானில் டிசம்பரில் தேர்தல் நடைபெறவுள்ளது. கஜகஸ்தானில் சனாதிபதியாக நூர்சுல்தான் நஜர்மாயோவ் இருக்கிறார். அவரது பதவிக்காலம் சனவரி மாதத்துடன் முடிவடைகிறது.


எனவே சனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடு நடைபெறுகிறது. டிசம்பர் மாதம் நான்காம் திகதி சனாதிபதித் தேர்தலை நடத்த தேர்தல் அதிகாரிகள் முடிவெடுத்துள்ளனர். இருப்பினும், பாராளுமன்ற ஒப்புதல் கிடைத்த பின்னர் தான் தேர்தல் திகதி முடிவாகும்.

அங்கு ஏழு ஆண்டுகளுக்கு பின் தேர்தல் நடைபெற இருக்கிறது. தற்போதைய சனாதிபதிக்கு அதிக செல்வாக்கு இருப்பதால் தேர்தலில் அவரே வெற்றி பெறுவார் என்றும் கூறப்படுகின்றது.

# அமெரிக்க போர்க்கப்பல் மீது ரொக்கெட் தாக்குதல் ஜோர்டான் இராணுவ வீரர் பலி

இஸ்ரேல் அருகே அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த போர்க்கப்பல்கள் மீது அல்ஹைதா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய குழு ரொக்கெட்டுக்களை ஏவி தாக்குதல் நடத்தியதில் ஜோர்டான் நாட்டு இராணுவ வீரர் பலியானதுடன் அமெரிக்க வீரர்கள் இருவர் காயமடைந்தனர்.

ஜோர்டான் நாட்டிலுள்ள அகாபா துறைமுகத்தில் அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த இரண்டு போர்க்கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கப்பல்கள் மீது நேற்று முன் தினம் காலை மூன்று ரொக்கெட்டுக்களை வீசித் திடீர் தாக்குதல் நடத்தப் பட்டது. ஆனால் அவை குறி தவறி அருகில் உள்ள மருத்துவமனை மற்றும் கிட்டங்கி ஆகியவற்றில் விழுந்தன. இதனால் பலத்த சேதம் தவிர்க்கப்பட்டது. ஆனாலும், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஜோர்டான் நாட்டு இராணுவத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் பலியானதாக தெரிகிறது. போர்க் கப்பல்கள் தவிர அருகிலுள்ள இஸ்ரேல் நாட்டு செங்கடல் துறை முகமான ஈலட் மீதும் ரொக்கெட் வீசப்பட்டன. இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சால்மொபஸ் கூறுகையில்; "ஒன்று அல்லது இரண்டு கட்யூசா ரொக்கெட்டுக்கள் விமான நிலையத்தின் அருகிலும், ஈலட் துறைமுக நகரத்தின் விடுதி ஒன்றின் அருகிலும், விழுந்தன. இந்த இடம் அகாபாவிலிருந்து ஒன்பது கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. எனினும் இந்த ரொக்கெட் தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவித்தார்.



ஜோர்டான் நாட்டிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதால் தீவிர வாதிகளை ஜோர் டான் நாட்டு இராணுவம் தீவிரவமாக தேடி வருகிறது.

இதற்கிடையில் இந்த ரொக்கெட் தாக்குதல் சம்பவத்திற்கு அல்ஹைதா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாத குழு பொறுப்பேற்றுள்ளதாக இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.



ஜோர்தானின் கரைப்பட்டிணமான அக்குவபாவில் நேற்று முன்தினம் மூன்று ரொக்கெட் தாக்குதல்கள் அமெரிக்க கடற்படைக் கப்பல் மீதும், விமான நிலையம் மீதும், மேலும் ஒரு கலத்தின் மீதும் நடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து அங்குள்ள பண்டகசாலையொன்றில் காவலிருக்கும் ஜோர்தான் பொலிசார்.

## கலிபோர்னியா சிறையில் மோதல் ஒருவர் பலி; 50 பேர் காயம்

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

தெற்கு கலிபோர்னியாவில் சாண்டிகோ நகர் அருகே உள்ள சிறையில் சிறைக் காவலருக்கும், கைதிகளுக்குமிடையே நடந்த மோதலில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். 25 கைதிகளும், 25 காவலர்களும் காயமடைந்தனர்.

## தோழர் என்று அழைக்க அவுஸ். பாராளுமன்றில் தடை

(கான்பரா)

மிகவும் நெருங்கி பழகியவரை "தோழர்" என்று அழைப்பது உலக அளவில் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் அப்படி அழைப்பதை அவுஸ்திரேலிய பாராளுமன்றம் தடை செய்துள்ளது. பாராளுமன்ற வளாகத்தில் பணிபுரியும் பாதுகாவலர்கள் இனிப் பார்வையாளர்களை சார் அல்லது மேடம் என்றுதான் அழைக்க வேண்டுமென பாராளுமன்ற விவகாரத் துறை அறிவித்துள்ளது. இதுபற்றி பிரதமர் ஜான் ஹவார்ட் கூறுகையில்; "இந்த நடைமுறை சாத்தியமானது அல்ல. மிக நெருக்கமானவர்களை தோழர் என்று அழைப்பதில் தவறில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# பன்னாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இளந்திரையன் சந்தித்துப் பேச்சு

## -செயற்றிட்டங்களின் நிலைகுறித்து ஆராய்வு

(மட்டக்களப்பு)

**பன்னாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களாகிய கிருஸ்டியன் எயிட் யு.கே, ஜீ.ரீ.இசட், வூஸ்க், ரி.டி. எச்.கெயார், யுனிசெப், போரூட், மேலின், சோவா (அகதிகளுக்கான ஆதரவு) ஆகிய நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளை மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் நேற்று முன்தினம் காலை 10. 30 மணியளவில் அரசியல்துறை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

இக்கலந்துரையாடலில் பன்னாட்டுத் தன்னார்வமுள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகள் தாங்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாகக் கூறியதோடு,அவர்கள் இரு பகுதிகளிலும் ஏற்படும் சிறுசிறு தடங்கல்களையும் எடுத்துரைத்தனர். இதற்கு இளந்திரையன் விளக்கம் அளிக்கையில்;

நீங்கள் அனைவரும் எமது மக்களின் முன்னேற்றத்துக்காக பல நன்மையளிக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்லுகின்றீர்கள். உங்கள் சேவைகளுக்கு எமது பாராட்டைத் தெரிவிப்பதுடன் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்களுக்கு ஏதும் தடங்கல்கள் ஏற்படின் அதை நாங்கள் நிவர்த்தி செய்து உங்களது பணிகளைச் சீராகச் செய்வதற்கு எம்மாலான சகல உதவிகளையும், ஒத்தாசைகளையும் நல்குவோமென எடுத்துரைத்தார்.

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கு பொருண்மிய மதியுரையகம் ஊடாக உதவி

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதி மக்களிற்கு திருமலை





மாவட்ட பொருண்மிய மதியுரையகம் தையல் இந்திரங்கள் மற்றும் சூரிய சகதி மின்கலத் தொகுதிகளை வழங்கியுள்ளது. இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வாகரையில் உள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துறை அலுவலகத்தில் நடை பெற்றது.

பிரான்சில் உள்ள கலைஞர்களும, முன்ரோய் பெனியோலை தமிழ் சங்கத்தின் நிதியுதவி மூலம் கிடைக்கப்பெற்ற 350,000 ரூபா பெறுமதியான இந்த உபகரணங்கள் பயனாளிகளிடம் வழங்கப்பெற்றன.

இந் நிகழ்வில் நிதியுதவி வழங்கிய நிறுவனங்களின் பிரதிநிதி விக்டர் அமலதாஸ் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசயற்துறைப் பொறுப்பாளர் செல்வி காரூண்யா மற்றும், பொறுப்பாளர்கள், போராளிகள் மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# சனசமூக நிலையங்களுக்கான மாதாந்த கூட்டத்திற்கு அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப்பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் அனைத்திற்குமான மாதாந்த குழுக் கூட்டம் இம்மாதம் 25ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் நன்கொடை வழங்கல் தொடர்பாகவும் உள்ளூராட்சி வாரம் சம்பந்தமான வேலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் சமுகம் தருமாறு கரைச்சிப்பிரதேச சபை செயலாளர் வெ.குலேந்திரன் வேண்டியுள்ளார். (கு)

# வவுனியாவில் அரச ஊழியர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை

(வவுனியா)

வவுனியர்வில் உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அரச ஊழியர்களுக்கு ஓமந்தைப் பிரதேசத்தில் காணி வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வவுனியா அரச அதிபர் சி. சண்முகம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அரச ஊழியர்களிடம் இருந்து கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைய இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். அரச ஊழியர்களுக்கு வழங்கத் தக்கவகையில் 200 ஏக்கர் காணியே உண்டு. அக்காணி 400 பேருக்கு வழங்கவே போதுமானது. இக்காணியைப் பெறத் தகுதியானவர்கள் யார்? என இனங்காணும் வேலை தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பேருக்கே இக்காணி பகிர்ந்தளிக்கப்பட உள்ளது. இக்காணியை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(10)

## ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் மகோற்சவம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூரில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் வருடாந்த மகோற்சவ திருவிழாவானது நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதில் ஏழாம் திருவிழா வெண்ணெய்த் திருவிழாவும், எட்டாம் திருவிழா வேட்டைத்திருவிழாவும் தொடர்ந்து தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழாவுமாக 12நாட்கள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## -யோகபுரம் மகாவித்தியாலயத்தில்-

# முல்லை. எழுச்சி மாநாட்டின் முன்னோடிக்கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய்ப்பிரதேச பொது அமைப்புக்களுக்கான முன்னோடிக் கலந்துரையாடல் நிகழ்வு யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற எழுச்சி மாநாட்டின் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைக் கோரி நடாத்தப்பட்ட மாபெரும் தேசிய எழுச்சி மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் முகமாக அடுத்த மாதம் 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள தேசிய எழுச்சி மாநாட்டுக்கு பொது அமைப்புக்கள் பங்களிப்பது குறித்து ஆராயப்பட்டது,

இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பணியாளர்களுடன் பாண்டியன்குளம் பிரதேச பொது அமைப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (24)

# தமிழீழ கலை பண்பாட்டுக்கழகத்தால் அம்பிளாந்துறையில் பேச்சுக்கலைப் பட்டறை

(மட்டக்களப்பு)

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட பேச்சுக்கலைப் பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் தமிழார்வன் தலைமையில் மட்டு. அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கவிப்புயல் தணிகாசலமும், தேசியக் கொடியினை மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையனும் ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையினர் இப்பயிற்சியினை வழங்கினர். இதில் விரிவுரையாளர் சந்திரகுமார் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவர்கள் கலந்துகொண்டு பேச்சுக் கலை தொடர்பான பயிற்சிகளை வழங்கினர். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மணிவண்ணன், மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் விமல்ராஜ், துணைப் பொறுப்பாளர் தாயகன், மட்டக்களப்பு மாவட்டத்தின் திட்டமிடல் பணிப்பாளர் செல்வன், மக்கள் தொடர்பாடல் பொறுப்பாளர் அரிகரன், கவிப்புயல் தணிகாசலம், மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, மற்றும் போராளிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலாமன்ற உறுப்பினர்கள், பேச்சாளர்கள் என 100இற்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

# கணினிகளை இயக்குவதற்கு எரிபொருள் தட்டுப்பாடு

(முள்ளியவளை)

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கணினி கூடத்தில் உள்ள கணினிகள் இயக்குவதற்கு மின் பிறப்பாக்கிக்கான எரிபொருளினைக் கொள்வனவு செய்ய முடியாதநிலையுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கல்லூரியில் உள்ள கணினிகளை இயக்கி மாணவர்களுக்கான கணினி கற்பித்தல் செயற்பாட்டைச் செய்வதற்கு அதன் மின்பிறப்பாக்கிக்கான எரிபொருளினை சில பழைய மாணவர்கள் வழங்கி வந்தனர். எரிபொருள் இல்லாமையினால் கணினியினை இயக்க முடியாதுள்ளதாகவும் எரிபொருளினை பழைய மாணவர்கள் தொடர்ந்து வழங்குவார்கள் என எதிர்பார்த்தபோதும் அதுவும் இடையில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

# செம்மலையில் புதிதாக நிறுவப்பட்ட மத்திய மருந்தகம் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

நீர்ப்திட்டத்தின் நிதியுதவியுடன் நிறுவப்பட்ட செம்மலை அளம்பில் மத்திய மருந்தகம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலை 11.30 மணியளவில் தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.சுதர்சன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கல விளக்கினை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வைத்தியர், செம்மலை கிராம அலுவலர், ஜேர்மன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க மருத்துவமாது ஆகியோர் ஏற்றினார்கள். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை அளம்பில் பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார். மத்திய மருந்தக கட்டடத்தின் பெயர்ப்பலகையினை முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா திரைநீக்கம் செய்தார்.

பெயர் பொறிக்கப்பட்ட கல்லினை கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து கட்டடத்தினை முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தர்மேந்திரா நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

தலைமையுரையினை தாய் சேய் நல வைத்தியர் க.சுதர்சன் வழங்க ஆசியுரையினை செம்மலைப் பிரதேச கோயில் குருக்கள் வழங்கினார். கருத்துரைகளை முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் மூர்த்தி வழங்கினார்.

இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (20)

# நம்பிக்கை ஊட்டும் திட்டம் ஆரம்பம்

(மன்னார்)

கார்ப் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஜிரி.இசற் நிதியுதவியுடன் மன்னார் மாவட்ட த.பு.கழகத்தினால் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சின்னப்பண்டிவிரிச்சான் கிராமத்தில் நம்பிக்கை ஊட்டும் திட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

மங்கல விளக்கினை மடு உதவி அரசாங்க அதிபர் தி. திரோஸ்குமார் ஏற்றிவைக்க தொடர்ந்து தேசியக் கொடியேற்றல், மௌன வணக்கம் என்பன இடம்பெற்றன. அடுத்து திட்டத்தின் ஆரம்ப வேலைத் திட்டமான, திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியிலுள்ள காடுகள் அழிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதனை மடு உதவி அரசாங்க அதிபர் தொடக்கி வைக்க மாவட்டப்பணிப்பாளர் அ.கேசவன். த.பு. கழக தலைவர் ப.மரியநாயகம் குரூஸ், சின்னப்பண்டிவிரிச்சான் கிராமசேவையாளர் அல்மேடா, கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக காட்டினை வெட்டி திட்டத்தினை ஆரம்பித்தனர். அடுத்து மண்டப நிகழ்வில் தலைமைபுரையினை கிராமஅபிவிருத்தி சங்கத்தலைவரும், வரவேற்புரையினை மாதர்சங்கத்தலைவியும், ஆசியுரையினை பங்குத்தந்தை வணபிதா அன்ரன் லியோ அவர்களும் நிகழ்த்தினர். கருத்துரையினை பணிப்பாளர் கேசவனும், சிறப்புரையினை மடுஉதவிஅரசாங்க அதிபரும் நிகழ்த்தினர். அவர் தனது உரையில் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் த.பு.கழகத்திற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, கிராமத்திற்கு வழங்கவிருக்கும் ஏனைய திட்டங்களைப் பற்றியும் கூறி தரப்பட்ட திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து த.பு. கழகத்தலைவர் அவர்களின் கருத்துரையும் இடம் பெற்றது.

# கற்கோவளத்தில் 203 வீடுகளைக் கட்ட "கியூமெடிக்கா" நிறுவனம் திட்டம்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கான, நிரந்தர வீடுகள் கையளிப்பின் முன்னோடியாக பருத்தித்துறை கற்கோவளம் கிராமத்தில் யாழ்.மாவட்டத்தின் முதலாவது நிரந்தர வீடு கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை பத்து மணியளவில் கற்கோவளம் தண்ணீர்ப்பந்தல் மைதானத்தில் யாழ். மாவட்ட சுனாமித் திட்டஅமுலாக்கல் செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஏற்றி வைத்தார். நிகழ்வில் தலைவரின் தலைமையுரையைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் எஸ்.இராஜ்குமார், வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பழகன், சுனாமி அனர்த்த செயலகப் பணிப்பாளர் பாலையா, மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கியூமெடிக்கா நிறுவன இலங்கைக்கான பணிப்பாளர் சாம் ராஜசூரியர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கற்கோவள கிராமத்தில் முதலாவது நிரந்தர வீட்டை மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். கியூமெடிக்கா நிறுவனப் பணிப்பாளர் சாம்ராஜசூரியர் வீட்டின் சாவியை வீட்டின் உரிமையாளரான சிவசம்பு சிவகுமார் அவர்களிடம் கையளித்தார்.

சுனாமிப் பேரலையால் பருத்தித்துறைப் பிரதேசத்தில் 1607 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் கற்கோவளம் கிராமத்தில் 203 வீடுகள் முற்றாக சேதமடைந்தன. இந்த 203 வீடுகளையும் கியூமெடிக்கா நிறுவனம் நிர்மாணித்து வழங்க முன்வந்துள்ளது. அதன் முதற்கட்டமாகவே யாழ். மாவட்டத்தின் முதலாவது நிரந்தர வீடு கியூமெடிக்கா நிறுவனத்தால் கையளிக்கப்பட்டது. தொடர்ந்தும் மாதத்திற்கு 50 வீடுகள் என்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டு எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து வீடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்படுமெனவும் இதற்கு இப்பிரதேச மக்களின் பூரண ஆதரவை வழங்க வேண்டுமெனவும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கியூமெடிக்கா நிறுவனப் பணிப்பாளர் சாம் ராஜசூரியர் தெரிவித்தார். (கா)

# ப.தெ.அ.கூ சங்க சமாசம் நடாத்தும் 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சாமசம் நடத்தும் கூட்டுறவு தினவிழா இன்று காலை பத்து மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் எஸ்.விஜிதரனும், கௌரவவிருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவநேசன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரை, யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பொறுப்பாளர் புஸ்பகுமார், கூட்டுறவு இணைப்பாளர் உதயன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அங்கத்தவர் கௌரவிப்புக் கலைநிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன. (கீ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்

யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் கடந்த புதன்கிழமை காலை 10.00 மணியளவில் வழங்கப்பட்டன.

யாழ்.வலிகாம வலய முன்பள்ளி ஆசிரியர்கள் 11 பேருக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஆனைக்கோட்டை கூளாவடியில் அமைந்துள்ள யாழ் வட-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு வளநிலையத்திலும்,யாழ்ப்பாண வலய முன்பள்ளி ஆசிரியர்கள் எட்டுப் பேருக்கு பிற்பகல் 3.00 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள பரியாகோபு முன்பள்ளியிலும் வைத்து சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினாலும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதிகள் பேரின்பநாதன், செல்வி.உமா. யாழ்.மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜ், யாழ். மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி.அன்சலின், வலய இணைப்பாளர்கள், பிரதேச இணைப்பாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# உவர்நீர்த்தடுப்பணைகளை புனரமைக்கக் கோரிக்கை

(வலி.மேற்கு)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உவர் நீர்த்தடுப்பணைகளைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர் கள் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று அப்பகுதி விவசாயிகள் தொடர்சசியாகக் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

பொன்னாலை தொடக்கம் வேலணைக் கரையோரம்வரை நீண்டு செல்லும் உவர்நீர்த்தடுப்பணையையே இவ்வாறு புனரமைப்புச் செய்யுமாறு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இந்த உவர் நீர்த்தடுப்பணைகள் கடந்தகால யுத்தநடவடிக் கைகளின் போது இராணுவத்தினரால் தொடர் பதுங்குகுழிகள் அமைப்பதற்கும் வேறு சில தேவைகளுக்காகவும் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் அருகிலுள்ள வயற் பிரதேசங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்து பயிர்ச்செய்கை நிலங்களெல்லாம் உவராக மாறிவருகின்றது. இதைவிட நன்னீர்க்கிணறுக ளெல்லாம் உவர்நீராக மாறும் நிலை ஏற்பட்டு வருகின்றது. இதனால் குடிநீருக்குப் பெரிதும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அடிக்கடி கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றபோதும் எதுவித மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (37)

# காரைநகர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

(வலி - மேற்கு)

காரைநகர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்துத் தருமாறு காரைநகர் அபிவிருத்திச் சபை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிரந்தர வைத்தியர் இன்மையால் காரைநகர் வாழ்மக்கள் சிறந்த மருத்துவ சேவையைப் பெறமுடியாது சிரமப்பட்டு வருகின்றார்கள். வைத்திய சேவையைப் பெறுவதற்காக பல மைல்கள் தொலைவிலிருக்கும் சுழிபுரம், சங்கானை, அராலி ஆகிய வைத்தியசாலைகளை நாடிச்செல்ல வேண்டிய அவல நிலை இருக்கின்றது என்றும் காரைநகர் அபிவிருத்திச் சபை பாராளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக் காட்டியிருக்கின்றது. (37)

# கோபியின் கைதிற்கு நடவடிக்கை எடுக்காவிடின் கண்காணிப்புக்குழு யாழ். இல் இருந்து பயனில்லை

-தமிழ் தேசிய விழிப்புணர்வுக்கழகம் அறிக்கை

கடந்த புதன்கிழமை காலையில் சுகயீன விடுமுறையில் வீட்டில் பெற்றோருடன் தங்கியிருந்த போராளி கோபி சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்தப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பிரசன்னமின்றி போராளிகளைக் கைது செய்யமுடியாது. இந்தப் போராளியை உடன் விடுவிக்க போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்காதவிடத்து கண்காணிப்புக்குழுவினர் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் தங்கியிருப்பது அர்த்தமற்றது என தமிழ்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள காலப்பகுதியில் அதுவும் இதனைக் கண்காணிக்க யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இங்கு தங்கியுள்ள சந்தர்ப்பத்தில் இலங்கை அரசு தமக்குச் சாதக மான முறையில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தி விட்டு போராளிகளைக்கடத்துகின்ற செயற்பாட்டில் இறங்கியுள்ளது.

ஒரு கையை ஏற்கனவே இழந்த சுகயீன விடுமுறையில் வந்து தங்கி நின்ற போராளி கடத்திச் செல்லப்பட்டமை ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் உள்ளபோது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பிரசன்னமின்றி போராளிகளைக் கைது செய்ய முடியாது என்பதனாலேயே போராளி கோபி அவர்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளார். இவரை உடன் விடுவிக்க போர் நிறுதத்தக்கண்காணிப்புக்குழுவினர் நடவடிக்கை எடுக்காதவிடத்து கண்காணிப்புக்குழுவினர் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் தங்கியிருப்பது என்பது அர்த்தமற்ற ஒன்றாகவே நாம் கருதுகின்றோம். ஏனெனில் இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் தொடருமாயின் கண்காணிப்புக்குழுவினரின் பணி இங்கு என்ன என்ற கேள்வி தோன்றுகிறது.

கடந்த மூன்று தசாப்த கால வரலாற்றினை சிறிலங்கா அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் மறந்து மீண்டும் புலிகளையும், தமிழ்மக்களையும் சீண்டிப்பார்க்க எத்தனிக்கிறது. இதன் விளைவுகள் விபரீதமானவையாகவே இருக்கும் என சிறிலங்கா அரசுக்கும் இராணுவத்தினருக்கும் எச்சரிக்கை விடுக்கும் அதே நேரம் போராளி கோபி உடன் விடுதலை செய்யப்படவேண்டும். தவறும் பட்சத்தில் குடாநாட்டில் உள்ள ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்குள் இந்த ஆயுத இனவெறிப்படைகள் முடங்கி இருக்க வேண்டி வரும் என்பதையும் தெளிவாகக்கூறிவைக்க விரும்புகின்றோம் என அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.இல் வீதி வழிகாட்டிக்கற்களில் விளம்பரச் சுவரொட்டிகள்

(வலி.மேற்கு)

யாழ். மாவட்டத்திலுள்ள வீதி வழிகாட்டிக் (கிலோமீற்றர்) கற்களில் விளம்பரச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவதால் வீதிப்போக்குவரத்துக்களின் போது வீதிகளை இனங்காண முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி வழிகாட்டிக் கற்களில் தனியார் கல்விநிலையங்கள், திரையரங்குகள், ஆலயங்கள் போன்றவற்றின் விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. இவை தவிர கண்ணீர் அஞ்சலி, தேர்தல் சுவரொட்டிகள் என்பனவும் ஒட்டப்பட்டு வருகின்றன. இதனால் குறித்த கற்களில் எழுதப்பட்டிருக்கும் இடங்களில் பெயர்மறைக்கப்படுகின்றன. நீண்ட இடைவெளிகளின் பின் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களும், உள்ளூர்களில் தூர இடங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களும் பாதைகளை இனங்கண்டுகொள்வதில பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(37)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாமுனை மக்களுக்கு புலம்பெயர்ந்த மக்கள் தொழில் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாமுனை மக்களுக்கு புலம்பெயர்ந்து தமிழ் மக்களால் மீன்பிடித்தொழில் உபகரணங்கள், படகுகள் வழங்கப் படவுள்ளன.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களின் முயற்சியால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிகிழக்கு மாமுனை மக்களுக்கு மீன்பிடித் தொழில் உபகரணங்களும், படகுகளும் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவகின்றது.

யா/ந/3117 திரு. கந்தர் குணம்
யா/ந/3121 திருமதி. சாந்தினிதேவி இராசரட்ணம்
யா/ந/3134 திருமதி. மேரிக்காபிரியலா அந்தோனிப்பிள்ளை
யா/ந/3146 திரு. கணபதிப்பிள்ளை மகாலிங்கசிவம்
யா/ந/3151 திரு. வேதம் முத்துவீரன்
யா/ந/3166 திருமதி. நேசமணி சண்முகலிங்கம்
யா/ந/3172 திருமதி. சிவமகாதேவி பரமநாதன்
யா/ந/3173 திரு. செல்லர் பரிமளசிங்கம்
யா/ந/3188 திரு. வல்லிபுரம் பரமசாமி
யா/ந/3192 திருமதி. பராசக்தி செல்லத்துரை
யா/ந/3202 திருமதி. புவனேஸ்வரி சோமசுந்தரம்
யா/ந/3208 திரு. கதிராமு இரத்தினம்
யா/ந/3215 திரு. நாகர் இராமலிங்கம்
யா/ந/3219 திரு. தனபாலசிங்கம் இராசரத்தினம்
யா/ந/3241 திரு. முத்து சுப்பையா
யா/ந/3248 திரு. வல்லிபுரம் சிங்கராசா
யா/ந/3250 திருமதி. சிவக்கொழுந்து செல்லையா
யா/ந/3259 திருமதி. சிந்தாமணி குணசிங்கம்
யா/ந/3260 திருமதி. சரஸ்வதி கனகரெட்ணம்
யா/ந/3261 திரு. சுப்பையா சதானந்தன்
யா/ந/3265 திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை
யா/ந/3269 திரு. சின்னத்துரை சந்திரசேகரம்
யா/ந/3274 திருமதி. சுகுணவதி ஜெயராஜா
யா/ந/3285 திருமதி. சறோஜினிதேவி தம்பாப்பிள்ளை
யா/ந/3288 திரு. கயிலாபிள்ளை சீவரெத்தினம்
யா/ந/3294 திரு. செல்லையா சந்திரசேகரம்
யா/ந/3295 திரு. சிவக்கொழுந்து சிவசுந்தரம்
யா/ந/3300 திரு. தம்பு சுப்பிரமணியம்
யா/ந/3322 திரு. சின்னையா தம்பு
யா/ந/3369 திரு. நாகன் வேலுப்பிள்ளை
யா/ந/3372 திருமதி. வாலாம்பிகை சண்முகநாதன்
யா/ந/3375 திரு. துரையப்பா வீரசிங்கம்
யா/ந/3378 திரு. நாகமணி வல்லிபுரம்
யா/ந/3391 திருமதி. விசாலாட்சி கிருஷ்ணபிள்ளை
யா/ந/3394 திரு. அம்பலவாணர் பாலசிங்கம்
யா/ந/3398 திரு. கந்தையா பூபாலசிங்கம்
யா/ந/3413 திரு. கந்தையா இராசையா
யா/ந/3419 திரு. சபாபதிப்பிள்ளை கனகரத்தினம்
யா/ந/3423 திருமதி. சரஸ்வதி தம்பித்துரை
யா/ந/3430 திரு. ஆறுமுகம் மாணிக்கம் இராசலிங்கம்
யா/ந/3431 திரு. கந்தையா சண்முகநாதன்
யா/ந/3440 திரு. பொன்னையா குருசாமி
யா/ந/3443 திருமதி. அன்னம்மா தனேஸ்வரன்
யா/ந/3452 திரு. செல்லப்பா பஞ்சரத்தினம்
யா/ந/3460 திரு. சிவப்பிரகாசம் நடராசா
யா/ந/3463 திரு. சதாசிவம் சிவபாதசுந்தரம்
யா/ந/3469 திரு. பொன்னையா பஞ்சலிங்கம்
யா/ந/3473 திருமதி. சரஸ்வதி சின்னத்துரை
யா/ந/3477 திருமதி. பறுவதம் கைலாசபிள்ளை
யா/ந/3491 திரு. தம்பிமுத்து முத்துலிங்கம்
யா/ந/3502 திரு. கதிரேசபிள்ளை சிதம்பரநாதன்
யா/ந/3507 திருமதி. பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்
யா/ந/3511 திரு. தம்பையா கனகசபை
யா/ந/3513 திரு. சின்னையா .நல்லதம்பி ஐயம்பிள்ளை
யா/ந/3515 திரு. கந்தசாமி ரவீந்திரன்
யா/ந/3530 திருமதி. செல்லம்மா முத்தையா
யா/ந/3531 திருமதி. கனகம்மா நடராஜா
யா/ந/3535 திரு. புண்ணியமூர்த்தி கிருஷ்ணதாசன்
யா/ந/3537 திரு. கதிரவேலு டேவிட் இராசசேகரம்
யா/ந/3543 திருமதி. சிவபாக்கியம் பத்மநாதன்
யா/ந/3554 திருமதி. தங்கலட்சுமி இராசையா
யா/ந/3555 திரு. சுப்பிரமணியம் குமாரசுவாமி
யா/ந/3558 திரு. சின்னக்குட்டி மயில்வாகனம்
யா/ந/3559 திருமதி. வள்ளியம்மை சின்னத்துரை
யா/ந/3577 திருமதி. றூபிசுகிர்தமலர் இராஜசிங்கம்
யா/ந/3594 திருமதி. செல்லமுத்து நாகலிங்கம்
யா/ந/3595 திரு. அம்பலவி கந்தையா வேலாயுதபிள்ளை
யா/ந/3603 திருமதி. அருளம்மா நாகலிங்கம்
யா/ந/3624 திரு. ஆறுமுகம் முத்துக்குமாரு
யா/ந/3631 திருமதி. அன்னலட்சுமி இராசலிங்கம்
யா/ந/3632 திரு. கனகசபை மருதப்பு
யா/ந/3633 திரு. முத்தையா இரகுராசகுமாரன்
யா/ந/3640 திரு. பொன்னையா சீவரத்தினம்
யா/ந/3644 திருமதி. தெய்வநாயகி சண்முகரத்தினம்
யா/ந/3656 திருமதி. விஜயலட்சுமி கனகரத்தினம்
யா/ந/3661 திரு. துரையப்பா விசுவநாதன்
யா/ந/3664 திருமதி. நாகரத்தினம் பொன்னையா
யா/ந/3666 திருமதி. கமலநாயகி தனநாயகம்
யா/ந/3669 திரு. கதிரேசு துரைராசா
யா/ந/3672 திரு. ஐயாத்துரை சரவணபவன்
யா/ந/3676 திருமதி. இரத்தினாவதி துரைஐயா
யா/ந/3678 திரு. வைரமுத்து சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்
யா/ந/3686 திரு. பொன்னுத்துரை பரராசசிங்கம்
யா/ந/3688 திரு. செல்லப்பா ஞானசுந்தரம்
யா/ந/3691 திருமதி. இராஜேஸ்வரி கந்தசாமி
யா/ந/3704 திரு. செல்லையா நாகராசா
யா/ந/3708 திருமதி. சரஸ்வதி செல்வராசா
யா/ந/3710 திருமதி. புஸ்பா பத்மானந்தன்
யா/ந/3725 திரு. முத்துத்தம்பி நவரத்தினம்
யா/ந/3731 திரு. சின்னத்துரை பத்மநாதன்
யா/ந/3733 திரு. துரையப்பா நவரெத்தினம்
யா/ந/3737 திரு. செல்லையா கனகலிங்கம்
யா/ந/3741 திரு. பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை
யா/ந/3743 திருமதி. புவனேஸ்வரி மகேசன்
யா/ந/3754 திருமதி. கனகம்மா கிருஷ்ணசாமி
யா/ந/3757 திருமதி. அன்னபூரணம் தேவராசா
யா/ந/ 3758 திருமதி. தாட்சாயணி நாகராசா
யா/ந/3763 திரு. நாகர் செல்வமுத்து
யா/ந/3766 திருமதி. கமலாம்பிகை இரத்தினம்
யா/ந/ 3768 திரு. பொன்னம்பலம் இராசரெத்தினம்
யா/ந/3775 திருமதி. இலக்குமி சிவராசன்
யா/ந/3784 திரு. குமாரசூரியர் வாமதேவன்
யா/ந/3785 திருமதி. அன்னபூரணம் இராசா
யா/ந/3792 திருமதி. கனகம்மா தியாகராசா
யா/ந/3795 திருமதி. இராசேஸ்வரி அப்புத்துரை
யா/ந/3799 திருமதி. சிந்தாமணி சிவஞானம்
யா/ந/3802 திருமதி. புவனேஸ்வரி தேவராசா
யா/ந/3803 திரு. சிதம்பரப்பிள்ளை இராசேந்திரா
யா/ந/3808 திருமதி. தையல்நாயகி நல்லையா
யா/ந/3809 திரு. சின்னத்துரை திலகராஜா
யா/ந/3812 திரு. கந்தையா சிவசுப்பிரமணியம்
யா/ந/3819 திரு. நடராசா அருணாசலம்
யா/ந/3822 திரு. சங்கரப்பிள்ளை இரெத்தினசிங்கம்
யா/ந/3831 திருமதி. பாக்கியலட்சுமி கனகலிங்கம்
யா/ந/3850 செல்வி. கீதா தம்பிஐயா
யா/ந/3855 திரு. பொன்னுத்துரை இராசரத்தினம்
யா/ந/3856 திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்
யா/ந/3873 திரு. கந்தையா இரத்தினசபாபதி
யா/ந/3880 திருமதி. தங்கராணி குணரத்தினம்
யா/ந/3881 திரு. செல்லையா சேனாதிராசா
யா/ந/3885 திரு. சின்னையா பரமலிங்கம்
யா/ந/3887 திரு. செல்லப்பா சின்னத்துரை
யா/ந/3893 திருமதி. புவனேஸ்வரி நவரத்தினம்
யா/ந/3896 திரு. பொன்னம்பலம் பஞ்சாட்சரம்
யா/ந/3897 திரு. நவரத்தினம் தலைவீரசிங்கம்
யா/ந/3898 திருமதி. இராசம்மா அருளானந்தம்
யா/ந/3903 திரு. கணபதிப்பிள்ளை ஞானசேகரம்
யா/ந/3920 திருமதி. இரத்தினம்மா இரத்தினம்
யா/ந/3925 திருமதி. இரத்தினம்மா சுப்பிரமணியம்
யா/ந/3928 திரு. கந்தையா துரைரத்தினம்
யா/ந/3932 திருமதி. மகேஸ்வரி ஆறுமுகம்
யா/ந/3933 திரு. தம்பு இரத்தினசிங்கம்
யா/ந/3940 திருமதி. தங்கம்மா சிவசுந்தரம்
யா/ந/3946 திரு. செபஸ்ரியாம்பிள்ளை சவரிமுத்து
யா/ந/3947 திருமதி. சற்குணம் நடராசா
யா/ந/3962 திருமதி. நாகம்மா பொன்னுத்துரை
யா/ந/3965 திரு. வைத்தியலிங்கம் சங்கரப்பிள்ளை
யா/ந/3969 திரு. பொன்னையா தம்பிராசா
யா/ந/3972 திரு. இரத்தினசிங்கம் சண்முகதாசன்
யா/ந/3975 திருமதி. அன்னலட்சுமி செல்வரட்ணம்
யா/ந/ 3983 திரு. அருணாசலம் செல்லத்துரை
யா/ந/3986 திருமதி. சிவகாமசெளந்தரி சபாரட்ணம்
யா/ந/3988 திருமதி. தங்கரெத்தினம் தம்பிராசா
யா/ந/3993 திரு. சண்முகம்பிள்ளை சபாரத்தினம்
யா/ந/4000 திரு. அந்தோனி. பெர்னாண்டோ சூசைப்பிள்ளை

(தொடரும்)

# 20/20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏயர் இந்திய அணி முன்னிலையில்




20-20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் தினேஷ் கார்த்திக் அபார ஆட்டத்தால் ஏர் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கர்நாடக கிரிக்கெட் சங்கம் சார்பில் 20-20 ஓவர் கிரிக்கெட் போட்டி முதல் முறையாக இந்தியாவில் நடத்தப்படுகிறது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்தைத் தொடர்ந்து இந்தியாவில் அறிமுகமாகும் இந்தப் போட்டிக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

ஆறு அணிகள் பங்கேற்றுள்ள இந்த ஆட்டம் பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. தொடக்க ஆட்டத்தில் ஏர் இந்தியா - பெங்கால் கிரிக்கெட் சங்க அணிகள் மோதின.

முதலில் ஆடிய பெங்கால் கிரிக்கெட் சங்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்புக்கு 118 ஓட்டம் எடுத்தது. மனோஜ் திவாரி 25 ஓட்டமும், தீப்தாஸ் குப்தா 30 ஓட்டமும் எடுத்தனர்.

ஏர் இந்தியா அணி தரப்பில் சுரேஷ் ரெய்னா மூன்று விக்கெட்டும், ஆர்.பி.சிங், சித்தார்த் திரிவேதி தலா இரண்டு விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் ஆடிய ஏர் இந்திய அணி 17.3 ஓவர்களில் மூன்று விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டம் எடுத்து ஏழு விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் 62 ஓட்டத்துடனும், ஸ்ரீராம் 30 ஓட்டத்துடனும் ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தனர்.

இரண்டாவது ஆட்டத்தில் ஏர் இந்தியா அணி. நியுசவுத் வேல்ஸ் அணியுடன் மோதியது. முதலில் ஆடிய நியு சவுத்வேல்ஸ் அணி 20




ஓவர்களில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 97 ஓட்டம் எடுத்தது. டேனியல் சுமித் 27 ஓட்டம் எடுத்தார். சுரேஷ் ரெய்னா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் ஆடிய ஏர் இந்தியா அணி 19.1 ஓவர்களில் மூன்று விக்கெட் இழப்புக்கு 100 ஓட்டம் எடுத்து ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. சுரேஷ் ரெய்னா 57 ஓட்டம் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார்.




# அவுஸ்.அணி பலமிழந்துவிட்டது முன்னாள் அவுஸ்.வீரர் வெசல்ஸ்




வெசல்ஸ்

அவுஸ்திரேலியா முன்பு இருந்ததைப் போல் நல்ல பலமுள்ள கிரிக்கெட் அணியாக தற்போது இல்லை என அவுஸ்திரேலியாவின் முன்னாள் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் கெப்ளர் வெசல்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர்களிடம் நல்ல திறமையிருக்கிறது. தொடரை வெல்ல முடியும். அது நான்காவது போட்டியில் அவர்கள் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தது என வெசல்ஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும்போது, பலமான இரு அணிகளும் மோதும் டெஸ்ட் ஐந்து போட்டிகளில் ஒன்று சமநிலையில் முடியலாம். ஆனால், ஆட்டத்தின் வேகத்தைப் பார்க்கும் போது முடிவு நிச்சயம் தெரியவரும் என்றும் இனிஒரு போட்டி சமநிலையில் முடியும் என தான் எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மத்தியு கெய்டனின் துடுப்பாட்டம் பற்றி விமர்சிக்கும் அவர் இங்கிலாந்தின் மும்மூர்த்திகளான ஹார்மிசன், பிளிண்டொப், ஜோன்ஸ் ஆகியோர் சிறப்பாக பந்து வீசுவதாக குறிப்பிடுகிறார்.

# நான்காவது டெஸ்ட் போட்டியில் அவுஸ். அணியில் ஷோன் டெய்ட்

இங்கிலாந்துடனான நான்காவது டெஸ்ட் போட்டியில் பங்குகொள்வதற்கென அவுஸ்திரேலிய அணியில் அறிமுக வீரரான ஷோன் டெய்ட் ஆயத்தமாகிறார்.


இங்கிலாந்து அணி மூன்றாவது போட்டியில் ரிவர்ஸ் - ஸ்விங் பந்து வீச்சை அறிமுகப்படுத்தி அழுத்தம் கொடுத்ததால் தாமும் அவ்வாறான ரிவர்ஸ் - ஸ்விங் பந்து வீச்சாளரைப் பயன்படுத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இவர் பங்குபற்றிய கவுண்டிப் போட்டிகளில் பல திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதால் அவருக்கு சர்வதேசப் போட்டிகளில் வாய்ப்பளிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது. இப்போட்டியில் கிளெஸ்பி பங்கெடுப்பது சந்தேகமானதால் கஸ்பரோவிச்சுடன் டெய்ட் இணைந்து ரிவர்ஸ் - ஸ்விங்கை மேற்கொள்வார்.



எனினும் அணியில் மாற்றம் ஏற்படுத்தினால் மட்டுமே டெஸ்ட்டில் சேர்த்துக் கொள்ளப்படுவார் எனக் கூறினார். ரிவர்ஸ் ஸ்விங் பந்துகளை சந்திப்பது கடினமானதே என ஒப்புக் கொண்டிருக்கும் அவர் பிரட்லீயின் வேகப்பந்து அதனை ஈடு செய்யலாம் என்றார்.

# ஆபிரிக்க 11 பேர் அணியை வீழ்த்தியது ஆசிய 11 பேர் அணி



ஆசிய 11 பேர் அணிக்கும் ஆபிரிக்க 11 பேர் அணிக்கும் இடையில் டர்பனில் நேற்று நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் ஆசிய அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆசிய அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் துடுப்பாடுவதாக அறிவித்தார்.

இதன்படி ஆரம்ப வீரர்களாக சேவாக், அப்ரிடி களமிறங்கினர். அப்ரிடி ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சேவாக் 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த சங்கக்கார, ஜெயவர்த்தன சிறப்பாக ஆடி ஆசிய அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். சங்கக்கார 61 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன 52 ஓட்டங்களையும் பெற்று ஓடோயோவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். யுகானா 42 ஓட்டங்களைப் பெற்றார். இன்சமாம் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ஓடோயோ மூன்று விக்கெட்டுக்களையும், ஸ்ரிக் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய ஆபிரிக்க அணி 250 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஓடோயோ 43, வில்லியர்ஸ் 39, கெம்ப் 38, பொலக் 29 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சஹீர்ஹான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக குமார் சங்கக்கார தெரிவானார்.



சிம்பாப்வே செல்லும் இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ள நட்சத்திரவீரர் சச்சின் டெண்டுல்கர் துடுப்பாட்டத்தை மேருகூட்டும் வகையில் வலைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதை காணலாம்.



இஸ்தான்புல் நகரில் துருக்கி கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா-1 காரோட்டப் பந்தய போட்டி இன்று நடக்கிறது. இதற்காக நேற்று முன்தினம் நடந்த பயிற்சி போட்டியில் பங்கேற்ற பெராரி அணியின் மைக்கேல் ஷுமாக்கர் (ஜேர்மனி) அதிவிரைவாக கார் ஓட்டிச் செல்கிறார்.

# உலக லெவன் அணியில் நியூசிலாந்து வீரர் ஹாட்லே

ஐ.சி.சி. உலக லெவன் - அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான சூப்பர் சீரிஸ் போட்டி மெல்போர்னில் அடுத்த வாரம் நடக்கிறது. இந்த போட்டிக்கான உலக லெவன் அணியில் நியூசிலாந்து சகலதுறை வீரர் ரிச்சர்ட் ஹாட்லே சேர்க்கப்பட்டுள்ளார்.

# சமாதான கிண்ணத்துக்கான கால்பந்துப் போட்டி கொழும்பு சென்பீற்றர்ஸ் கல்லூரி சம்பியன்

சமாதானக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி வெற்றிபெற்று இவ்வாண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.


கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணியும் மோதியது. ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இருந்த இந்த ஆட்டத்தில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சமாதான கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஏழு பாடசாலைகள் பங்குபற்றின. இந்தச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தினை மன்னார் புனித சேவியர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

கடந்த வாரம் நடைபெற்ற சமாதானக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

(கீ)

## சிந்தனைக்கு



மனித ஆளுமை பாலியல் வேறு பாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கின்றது; அது மனிதப்பிறவிகளுக்குப் பொதுவானது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21.08.2005
தொலைபேசி 060-2213244 மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham23 ela@ yahoo.com

## அமுலாக்கினால் போதும்!

சிறிலங்கா அரசுடன் உயர்மட்டப்பேச்சுக்களை நடத்த நோர்வேத்தரப்பிடம் விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான நோர்வேத்தரப்பின் தகவலின்படி கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் குறித்துப் பேசுவதற்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிய முடிகிறது.

விடுதலைப்புலிகளுக்கும்-ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான, ஐ.தே.க அரசாங்கத்திற்கும் இடையில் 2002 பெப்ரவரியில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாடு கடந்த வாரத்தில் பெரும் சவால்களைச் சந்திக்கவேண்டியதாகியது. படிப்படியான வளர்ச்சி கண்டுவந்த நெருக்கடி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் உச்சக் கட்டத்தைக் அடைந்ததெனலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் யுத்தநிறுத்தம் நெருக்கடிகளைச் சந்தித்தமைக்கு விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டுவது அண்மைய அரசியல் வரலாற்றிற்கும் நிகழ்கால யதார்த்தத்திற்கும் மாறுபாடானதாகும். அதாவது உண்மைக்குப் புறம்பானதாகும்.

யுத்தநிறுத்த உடன்பாடு ஆரம்பம் முதலே நெருக்கடிக்கு உள்ளாகியது சனாதிபதி சந்திரிகாவினாலேயே ஆகும். விடுதலைப்புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டை ஆரம்பம் முதலே அவர் கடுமையாக எதிர்த்து வந்தார். யுத்த நிறுத்தத்திற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் எதிரான சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்தே கடந்த பொதுத்தேர்தலில் அவரது கட்சி போட்டியிட்டது.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டதையடுத்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எதிலும் அன்றைய ஐ.தே.முன்னணி அரசாங்கத்தினால் இறுதி முடிவுக்கு வரமுடியவில்லை. அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கம் அரசியற் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தினால் முன்னேற முடியவில்லை. ஏனெனில் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்த சனாதிபதியால் அவற்றிக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டவண்ணமே இருந்தது.

இன்னொரு புறத்தில் சனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள முப்படைகளும் யுத்தநிறுத்தத்தை முறியடிக்கும் வகையிலான செயற்பாட்டில் முனைப்புக்காட்டின. குறிப்பாகச் சிறிலங்கா கடற்படை யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதாகவிருந்தது.

இவ்வாறாக யுத்தநிறுத்த உடன்பாடு ஒருபுறத்தில் நெருக்கடிக்கு உள்ளாகிக் கொண்டிருக்கையில் சனாதிபதி சந்திரிகாவால் பாதுகாப்புக் காரணங்கள் காட்டப்பட்டு புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டைச்செய்து கொண்ட ஐ.தே. முன்னணி அரசாங்கம் கலைக்கப்பட்டது. இதன் மூலம் யுத்த நிறுத்தம் ஒருபுறத்தில் கேள்விக்குள்ளாகிய அதேவேளை மறுபுறத்தில் இருதரப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளும் நிறுத்தப்பட்டன. மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட யுத்தநிறுத்தகாலத்தில் சுமார் இரண்டரையாண்டுகள் பேச்சுவார்த்தைகள் எவையும் இடம்பெறவில்லை.

ஆனால் இக்காலப்பகுதியில் யுத்தநிறுத்த உடன்பாட்டைச் சிதைவடையச்செய்யும் வகையில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கைகளை முனைப்புப்படுத்தியிருந்தது. ஒரு புறத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை அமுல்படுத்துவதை ஓரம் தள்ளிய அரசாங்கம் மறுபுறத்தில் யுத்த நிறுத்த விதிகளுக்கு மாறான நடவடிக்கையிலும் தீவிரமாக ஈடுபட்டது.

குறிப்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டில் மக்களின் இயல்பு வாழ்வினைத் தோற்றுவிப்பதற்கென மேற்கொள்ளப்படவேண்டியதான சரத்துக்களை நிறைவேற்றத் தவறியது. அதாவது மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியேற அனுமதி வழங்க மறுத்ததோடு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்கையை மேம்படுத்துவதற்கான உடனடி மனிதாபிமான தேவைகளை நிறைவுசெய்யும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ள அது தயாராக இருக்கவில்லை.

மறுபுறத்தில் இராணுவப்புலனாய்வுத்துறை துணைப்படைகளாகச் செயற்படும் தமிழ் இனவிரோதக் குழுக்களையும் பயன்படுத்தி யுத்தநிறுத்த மீறல்கள் பலவற்றை மேற்கொண்டது. யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி துணைப்படைகளிடம் இருந்து களையப்படவேண்டிய ஆயுதங்களுக்குப்பதில் மேலும் ஆயுதங்கள் வழங்கப்பட்டதான நிலைமையே காணப்பட்டது. அது மாத்திரமன்றி துணைப்படையின் பேரில் நேரடித்தாக்குதல்களில் கூட சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை ஈடுபட்டது.

இதன் விளைவாகவே யுத்தநிறுத்தம் இன்று பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியதாகியுள்ளது. இதைவிடுத்து அரசாங்கம் கூறிக்கொள்வது போல் யுத்தநிறுத்த உடன்பாட்டில் உள்ள தவறுகள், ஓட்டைகள் யுத்தநிறுத்தம் நெருக்கடிகளைச் சந்திக்கக் காரணம் அல்ல. சந்திரிகா அரசாங்கத்தினதும், ஆயுதப் படையினரதும் உடன்பாட்டிற்கு விரோதமான செயல்களே யுத்தநிறுத்தத்தைக் கேள்விக்குள்ளாக் கியுள்ளன.

இந்நிலையில் இன்றைய நெருக்கடிநிலை தீரவேண்டுமானால் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாடு முழு அளவில் அமுல்படுத்தப்பட்டால் போதுமானதாகும். அதைவிடுத்து உடன்பாட்டுவிதிகளை மாற்றுதல் வேண்டும் மீள் பரிசீலனை செய்தல் வேண்டும் எனக் கோருவதெல்லாம் அர்த்தமற்றவையாகும். உடன்பாடு செய்யப்பட்டால் மட்டும் போதாது. அவை அமுலாக்கப்பட்டாலே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைச் சிங்கள ஆட்சியாளர்கள் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

# புத்தளம் நுரைச்சோலை அனல் மின் நிலையம் சீனாவுடன் ஒப்பந்தம் செய்ய சந்திரிகா திட்டம்

(கொழும்பு)

இந்தமாத இறுதியில் சீனாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும் பொழுது, இலங்கையின் முதலாவது அனல் மின் நிலையத்திற்கான ஒப்பந்தம் ஒன்றை சீன அரசுடன் மேற்கொள்ள இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்படி, முதல் கட்டமாக 300 மெகாவாட் வலுவான அனல் மின் நிலையம் ஒன்று புத்தளம மாவட்டத்திலுள்ள நுரைச்சோலையில் 94,500 அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான 30 கோடி அமெரிக்க டொலர் நிதியை சீன அரசாங்கம் கடனடிப்படையில் வழங்கவுள்ளது.

இந்த நிலையத்தை சீன அரசு வடிவமைத்து, நிர்மாணித்து இலங்கைக்கு வழங்கவுள்ளது.

1990 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம், கடந்த யூலை மாதம் சீனாவில் இருந்து வருகை தந்த நிபுணர் குழுவினரின் அறிக்கையுடன் உறுதி செய்யப்பட்டது. (32)

# தென்மராட்சி படைநிலைகளுக்கு சிறிலங்கா இராணுவத் தளபதி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட யாழ். தென்மராட்சி படை நிலைகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள படையினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருடன் அமெரிக்கத் தூதரகத்தின் யுத்த ஆலோசகரும் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை யாழ். சென்ற இவர்கள் யாழ். தளபதி சுனில் தென்னக்கோனுடன் தென்மராட்சி முன்னரங்க படை நிலைகளுக்கு சென்றுள்ளனர்

கிளாலிப் பகுதியில் உள்ள இராணுவ கொமாண்டோக்களான எயார் மொபைல் பிரிகேட்டின் பயிற்சி மையத்துக்கு சென்ற அவர்கள் அங்கு அந்த அணியினர் செய்ய வேண்டிய பணிகள் குறித்து விளக்கினர். தனங்கிளப்பு பகுதிக்கும் சென்ற அவர் அங்கு கொமாண்டோ பிரிவான 53 ஆவது படைப் பிரிவின் தளபதி என்.ஏ.ஜயசூரிய, 52 ஆம் டிவிசன் தளபதி சனத் கருணாரட்ண ஆகியோருடன் முக்கிய கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். அத்துடன் கச்சாய் முன்னரங்க நிலைகளுக்கும் அவர்கள் சென்றுபார் வையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

# மக்கள் எதிர் நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்த விடோம்

## ஐ.தே.க பா.உ ராஜித சேனாரட்ண கூறுகின்றார்

40 ஆண்டுகளுக்குப் பின்பு அவசரகாலச்சட்டத்தை நடைமுறைப் படுத்தாமல் ஆட்சி நடத்திய ஒரே தலைவர் தமது தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். அவசர காலச் சட்டம் இல்லாமலேயே மக்களின் அடிப்படை உரிமைகளையும் சனநாயக உரிமைகளையும் தாம் பாதுகாத்துக் கொடுத்ததாக தெரிவித்த அவர், அவசரகாலச் சட்டத்தின் மூலம் இந்த நாட்டு மக்களின், மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அரசு முயற்சிக்குமாக இருந்தால் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

நாம் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தமது அரசியல் எதிரிகளை பழிவாங்குவதற்காக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தவோ அன்றி தேர்தல்களை பின் போடுவதற்காக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தவோ தாம் இடமளிக்கப் போவதில்லை எனவும் கலாநிதி ராஜித சேனாரட்ண வலியுறுத்தினார். (32)

# அடையாள அட்டை கட்டாயமாக்கப்படின் மலையக மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்படும்

## இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி தெரிவிப்பு

எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிக்க அடையாள அட்டை கட்டாயமாக் கப்பட்டால் பல்லாயிரக்கணக்கான மலையக வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்படும் என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உபதலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், தேர்தல்களில் வாக்களிக்க அடையாள அட்டை அவசியம் என பாராளுமன்றில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தேசிய அடையாள அட்டையை அனைவரும் ஒருவருடத்துக்குள் இலகுவாக பெற்றுக் கொள்ளும் நடை முறை பின்பற்றப்படும் என உறுதி வழங்கப்பட்டது. ஆயினும் பெருந்தோட்டங்களில் இந்த இலகு நடைமுறை பின்பற்றப்படவில்லை. இந்த நிலையில் நாட்டில் மீண்டும் ஒரு தேர்தல் இடம்பெறும் போது அடையாள அட்டை கட்டாயப் படுத்தப்பட்டால் பெருமளவான மலையக மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# கதிர்காமரின் கொலை விசாரணைக்கு சுதந்திர ஆணைக்குழு அவசியம்

## ஐ.தே.க வலியுறுத்து

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள சுதந்திரமான ஆணைக்குழு வொன்று ஸ்தாபிக்கப்பட்ட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜொன்ஸ்ரன் பெர்ணாண்டோ இந்த தருணத்தில் இப்படியான ஆணைக்குழுவின் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

அதேவேளை, அரசியல் இலாபம் கருதி அவசரகால சட்டத்தை அரசாங்கம் மக்களுக்கெதிராக பிரயோகிக்கும் பட்சத்தில் அதை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்க்கும் எனத் தெரிவித்தார்.

ஜே.வி.பி தமது நாசகார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய ஆயுதங்கள் எதனையும் இதுவரை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

# ரயில் கடவையில் விபத்து இருவர் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு குறணையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தொன்றின் காரணமாக இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் வண்டியுடன் முச்சக்கரவண்டி புகையிரதக் கடவையில் மோதியதையடுத்தே இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.இது தவிர பத்து வயதுக் குழந்தை உட்பட இருவர் காயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 'வழி' சிறுகதைத் தொகுதி நூல் வானதி பதிப்பகத்தால் வெளியீடு

கப்டன் வானதி பதிப்பகத்தின் "வழி"சிறுகதை நூல் வெளியீட்டுவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

கப்டன் வானதி பதிப்பகத்தின் ஏழாவது வெளியீடான வழிசிறுகதை நூல் வெளியீடும் இலக்கியப்போட்டி-2005 இற்கான பரிசளிப்புவிழாவும் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 2ஆம் லெப் மாலதிபடையணி போராளி மலைமகள் உரை நிகழ்த்தினார். அடுத்து வழி சிறுகதை நூலினை மூத்தபோராளி தேவா வெளியிட்டு வைக்க, சிறப்புப்பிரதிகளை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி வழங்கி கௌரவித்தார். அடுத்து இலக்கியப்போட்டி 2005 இல்சிறந்த படைப்பாளிகளுக்கான





பெற்றது. தமிழீழ பெண்கள் மற்றும் பெண்போராளிகளின் படைப்புக்களாக அமைந்த சிறுகதைகளை தொகுத்து வழி என்னும் நூல்வடிவில் கப்டன் வானதி வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றி வைத்தார்.தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியை லெப். கேணல் பொன்னம்மான் கண்ணி வெடிப்பிரிவின் தளபதி உமையாள் ஏற்றிவைத்தார்.

அடுத்து போராளி தமிழவளின் தலைமையில் நடைபரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், ஆதிலட்சுமிசிவகுமார் ஆகியோர் வழங்கினர் .தொடர்ந்து நூல் மதிப்பீட்டுரையினை கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் மணிமேகலை குமாரசாமி நிகழ்த்தினார். தமிழீழ கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளரும் கவிஞருமான புதுவை இரத்தினதுரை சிறப்புரையாற்றினார். இந் நிகழ்வில் இலக்கியப் படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச)

# ஊசிகள் மூலம்பரவும் நோயால் கொழும்பில் நால்வர் பலி

ஊசிமூலம் பரவும்மெனிஞ்சரிஸ் என அழைக்கப்படும் நரம்பு மண்டலத்தை தாக்கும் நோய் காரணமாக இதுவரை நால்வர் மரணமாகியுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலைத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊசிகள் மூலமே இந்த நோய் பரவியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் குறித்து அரசாங்க வைத்திய சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்திய கலாநிதி திமந்த குணசேகர விபரம் தெரிவிக்கையில்,

இந்த நோய் குறித்த ஆய்வுகளையும் பகுப்பாய்வுகளையும் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் இந்த நோய் தொடர்பான மாதிரியுடன் விபரங்கள் அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நாட்டின் அரசாங்க வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் சிரிஞ்சர்கள் அனைத்தும் திரும்பப்பெறப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (32)

## விசேட சந்திப்பு

விசுவமடு பிரதேச அனைத்து வாகன உரிமையாளர்களுக்குமான சந்திப்பு ஒன்று இன்று பிற்பகல் 3.00 மணிக்கு விசுவமடு மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. எனவே அனைத்து கன்டர்,உழவு இயந்திர உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு விசுவமடு அரசியல்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர். (46)

# அரசு–புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டுமாம்

-ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இலங்கையில் தடைசெய்யப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கு சென்றால் அது தமிழீழ விடுதலைப்புலிகளை வளர்த்துவிடும் நடவடிக்கையாகவே அமையும் என கட்சியின் பேச்சாளர் நிநாந்தஶ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கவேண்டுமானால் முதலில் நோர்வே நாடு பேச்சுவார்த்தை மத்தியஸ்த தன்மையில் இருந்து விலகிக்கொள்ளவேண்டும்.

இதன்பின்னர் அரசாங்கம் தற்போதையஉடன்படிக்கையில் இருந்து விலகி தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்து அவர்களின் ஆயுதங்களை களையவேண்டும் இதன் பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்தப்பட வேண்டும் எனதெரிவித்த வர்ணசிங்க, அந்தப்பேச்சுவார்த்தையின் மத்தியஸ்தர்களாகபிராந்திய நாடுகள் செயற்படவேண்டும் எனக் கேட்டுள்ளார்.(32)

## முகமூடி..

கடந்த 90நாட்களாக (சட்டவிரோத புத்தர்சிலை நிறுவப்பட்டதன் பின்னர் பிரகடனப்படுத்தப்படாத அவசர காலச் சட்டத்தின் மூலம் தமிழ்மக்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் வாழ்வது போன்று பல்வேறு விதமான அடக்குமுறைகளுக்கும் அசௌகரியங்களுக்கும் தொடர்ந்துஉள்ளாகி வருகின்றனர்.

திருகோணமலை நகரத்தில் அத்துமீறிக் குவிக்கப்பட்ட இராணுவத்தை உடனடியாக வாபஸ் பெறுவதாகக் கூறி சனாதிபதியும் அரசாங்கமும் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் மீறப்பட்டு இன்று சிறிலங்கா இராணுவமும் படையதிகாரிகளும் மனம்போன போக்கில் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமையானது சமாதான ஒப்பந்தத்தை கூண்டோடு அழிக்கும் செயற்பாடாகும். 19.08.2005அன்று மாலை 5.30மணிக்குதமதுமுகத்தை கறுப்புத்துணியால் மூடிக் கட்டியவாறு இலக்கமில்லாத 20 இற்கு மேற்பட்ட உந்துருளிகளில் உள்துறைமுகப்பொலிஸ் நிலையத்திற்கு முன்பும் தபால்கந்தோர் சந்தியிலும் மடத்தடிச்சந்தியிலும் இன்னும் சில இடங்களிலும் கட்டுக் கடங்காத வேகத்தில் ஆயுதங்களை மக்களை நோக்கி அசைத்தவாறு தமிழ் பேசும் மக்களை அச்சுறுத்தும் பாணியில் நடந்து கொண்டுள்ளமையானது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் மட்டுமல்ல மனித உரிமை மீறலுமாகும்.

சட்டத்தை அமுல்படுத்துகின்ற சிறிலங்கா படையதிகாரிகள் சட்டவிரோதமான ஆயுததாரிகளையும் உந்துருளிகளையும் நகருக்குள் அனுமதித்துள்ளார்களா? என்பதை கண்காணிப்புக்குழுத்தலைவர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும். இவர்களினது செயலை காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ள இராணுவம் .பார்த்துக்கொண்டிருப்பதானது அவர்களுக்கிடையே உள்ள தொடர்பினை வெளிப்படுத்துவதாகும். இனங்காண முடியாத ஆயுததாரிகளை நகருக்குள் அனு மதித்து இயல்பு நிலையைக் குழப்பும் நோக்கில் செயற்படுவதானது சமாதான ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவருமென எச்சரிக்கின்றோம். இன்று திருகோணமலை நகரம் இயல்பு வாழ்க்கை முற்று முழுதாக குழம்பிப்போயுள்ள நிலையிலேயே காட்சியளிக்கின்றது. இன்னும் அவசரகாலச்சட்டத்தைப்பயன்படுத்தி தமிழ் மக்களை நசுக்குவதற்குப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கையை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு உடனடியாக தடுத்து நிறுத்துவதோடு இனங்காண முடியாத ஆயுததாரிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளிவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம் எனக் கோரப்பட்டுள்ளது.

இதன்பிரதிகள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினர்,சனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர்,படைத்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (25)

## அரசின்..

அவரது கணவர் செல்வராஜாவையும் விடுதலைப்புலிகள் கொலை செய்தார்கள் என்று குற்றம் சாட்டுவது எமக்கு அதிர்ச்சியளிக்கிறது. விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்கள் தமக்குள் ஏற்படும் உள்முரண்பாடுகளால் கொல்லப்படும்போது அதற்கு விடுதலைப்புலிகள் மீது பழிபோடுவது வழமையாக இடம்பெறும் செயல். ஆனால், தற்போது ஒலிபரப்பாளர் லேரங்கி செல்வராஜா படுகொலை தொடர்பில் விடுதலைப்புலிகள் மீது ஏன் பழி போடுகின்றார்கள் என்று தெரியவில்லை.

சிறிலங்காவின் தலைநகரில் இருந்து கொண்டு சிறிலங்காவினுடைய கூலிப்படைகளாகவோ அல்லது அவர்களுடைய தூண்டுதலின் பேரிலேயோ விடுதலைப் புலிகள் மீதான ஒட்டுமொத்த அவப்பெயரை ஏற்படுத்துவற்கு கொலையாளிகள் இவ்வாறான முயற்சிகளை செய்துவருகின்றார்கள் என்று எங்களுக்குத் தெரிகிறது.

இவ்வாறான கொலைகளைச் செய்ய வேண்டிய தேவையோ, சூழலோ எமக்கு இல்லை. இவர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தீவிரமாக செயற்பட்டதாகவோ நாம் அறியவில்லை. ஆனால், இப்போது இவ்வாறான குற்றங்கள் எம்மீது சுமத்துவது வழமையாகிவிட்டது.

சிறிலங்காவின் தலைநகரில் ஊடுருவியுள்ள ஆயுதக் குழுக்கள் பற்றியும், அங்குள்ள பாதாள உலகக் குழுக்ககளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைகள் பற்றியும் உங்களுக்கு நன்கு தெரியும். இந்தக் கொலைகளுக்கான பொறுப்பை விடுதலைப்புலிகள் மீது சுமத்திவிட்டு தப்பித்துக்கொள்ளும் ஒரு போக்கே தென்னிலங்கையில் காணப்படுகிறது. இதனால்,உண்மையில் பாதிக்கப் படப்போவதுசிறிலங்கா அரசாங்கம்தான்.

ஏனெனில், கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியையோ அல்லது டுப் பாட்டிற்குள் கொண்டு வரும் டு ந்சியையோ கைவிட்டுவிட்டு எழுந்தமானமான குற்றச்சாட்டுக்களை எம்மீது சுமத்துகின்றனர். இது அவர்களுக்குத்தான் பாரதுாரமான விளைவை எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகிறது என்று கூறினார்.

"கதிர்காமர் கொலையில் உங்களுக்கு தொடர்பிருக்கிறது என்று சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் பிரச்சாரத்தில் நீங்கள் வெற்றி பெறுவீகளா?' எனக் கேட்டகப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்;

சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகிற பிரச்சாரத்தை வெற்றி கொள்ளக்கூடிய நம்பிக்கை நிச்சயமாக எம்மிடமுள்ளது. உண்மை, நேர்மை என்பதுதான் நிலை க்கும். அந்த வகையில், உண்மை யின் பக்கமும், நேர்மையின் பக்கமும் நாம் உள்ளோம்.

கடந்த காலங்களில் எமக்கு எதிரான பிரச்சாரங்கள் எவ்வாறு உடைபட்டிருந்தன என்பதும், எமது விடுதலைப் போராட்டம் எவ்வாறு கொச்சைப்படுத்தப்பட்டிருந்தது என்பதும் உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும்.

சர்வதேச அரங்கில் எம்மை ஒரு பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப் படுத்தி எம்மை பலவீனப்படுத்த எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும், அவர்களால் வெற்றிகொள்ள முடியாமற்போய்விட்டது. ஏனெனில், தமிழ் மக்கள் நீதியான, நியாயமான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

எமது போராட்டம் எந்த மக்களையும் அச்சுறுத்துவதற்கான போராட்டம் அல்ல. உலகத்தையோ அல்லது உலக நாடுகளையோ, அயல் நாடுகளையோ எவரையும் அச்சுறுத்துவதற்கான போராட்டம் அல்ல. சிறிலங்காவில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்குக்கூட எதிரானது அல்ல. அவர்களுக்குக்கூட சுபீட்சமான வாழ்வு கிடைக்க வேண்டும் என்பது எமது இலட்சியங்களில் ஒன்று.

சிறிலங்காவில் - சிங்கள தேசத்தில் - சிங்கள மக்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். எமது தேசத்தில் எமது மக்கள் மகிழ்ச்சியாக நிறைவாக வாழ வேண்டும். எமது மக்களுடைய வாழ்நிலையினை சீரகுலைத்து எமது மக்கள் மீதும் தேசத்தின் மீதும் திணித்துள்ள இந்த ஆக்கிரமிப்பு இராணுவத்தை, அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை முறியடித்து இதில் வெற்றிகொண்டு எமது மக்களுக்கு விடிவினைப்பெற்றுக் கொடுப்பதற்காகவே நாம் போராடி வருகிறோம்.

எமது நியாயமான போராட்டத்திற்கு எல்லாவிதமான ஆதரவும் ஒரு கட்டத்தில் வந்து குவியும் என்று நாம் எதிர்பார்த்து வருகின்றோம். ஏனெனில், நீதியும், நியாயமும் தான் வெல்லும். உலக அளவிலும் இதனை நாம் கண்டிருக்கிறோம்.

உண்மையில் சுதந்திரத்திற்காக, உரிமைக்காக, தமது வாழ்வுரிமைக்காக போராடிய அனைத்து மக்களும் தமது இலக்கை அடைந்துள்ளனர். அந்த வகையில் எமது மக்களும் அந்த இலட்சியத்தை, இலக்கை அடைவார்கள். எமது தலைவருடைய காலத்தில் அது நிச்சயமாக முழுமையடையும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் உள்ளோம்.

எமக்கு எதிராக எம்மீது மோசமாக கறை பூசுகின்ற பிரச்சாரங்களை நாம் முறியடித்து நிச்சயமாக எமது மக்களுக்கு நல்லதொரு வெற்றியை தேடிக்கொடுப்போம் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளோம் என்றார்.

## பிராந்திய...

பான விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகவும் ஐக்கிய தேசிய கட்சியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## ஈ.பி.டி.பி...

சிறியரக கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளதாக வவுனியா சிறிலங்காப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேயசிங்க பண்டா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகம் இளஞ்செழியன் சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டு விசாரணைக்கு உத்தரவிட்டார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.